سعيدا لوادرك العمل ، فيقول الله تبارك وتعالى . . ايـاي عصيتهم وكيف برسلي بالغيب.

மறுமையில் ஃபத்ரத்தில் இறந்தவரையும், புத்தி யிழந்தவன் போன்றும் புத்தியுடையவன் போன்றும் தென்படும் மனிதனையும், பிறந்தவுடன் இறந்து போய் விட்ட குழந்தையையும் கொண்டு வரப்படும். ஃபத்ரத் தில் மரணித்தவன், எனது காலத்தில் இறைவா, உனது வேதமோ, ரசூலோ வரவில்லையே என்க, பைத்தியம் போன்ற மனிதன், என் இரட்சகா, நல்லது, கெட்டதை பிரித்தறியும் சுயபுத்தி எனக்கு நீ அளிக்கவில்லை என்க, அமல் என்பதையே உணராத பச்சிளங் குழந்தையாக அல்லவா நான் இருந்தேன் என இளம்பிராயத்தில் மரணித்த குழந்தை சொல்லும்.

அப்போது அவர்களை நோக்கி இந்த நெருப்பில் நுழையுங்கள் என கட்டளையிடப்படும். இறை ஏற்பாட்டில் எவர்கள் சீதேவிகளாக உள்ளனரோ அவர்கள் அதனுள் நுழைந்திடுவர். இறை ஏற்பாட்டில் எவர்கள் மூதேவிகளோ அவர்கள் நுழைய மறுப்பர். இச்சந்தர்ப்பத்தில் அல்லாஹ் அவர்களை நோக்கி இப்போதே நீங்கள் என் கட்டளைக்கு மாறு செய்கிறீர் களே, அப்படியானால் எனது தூதர்களே இல்லாத காலத்தில் என்னென்ன தீமைகளை செய்திருப்பீர்கள் என்பான்.

இந்த ஹதீதை அறிவிப்பு செய்தோரில் அதிய்யா அல் அவ்பீ என்பவரும் ஒருவர். இவர் பலகீனமான அறிவிப்பை உடையவர். இதற்கு பல அத்தாட்சிகள் உள்ளது. எனவே இமாம் திர்மிதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இதனை ஹஸன் என்ற தரஜாவில் கணித்துள்ளார்கள்.

**ஹதீது இலக்கம் நான்கு :**

ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிப்பதாக ஹழ்ரத் பஸ்ஸார், ஹழ்ரத் அபூ யஃலா போன்றோர் தத்தமது முஸ்னதுகளில் பதிவு செய்து வைத்திருக்கும் ஹதீது இது.

قال رسول الله صلى الله عليه وسلّم يؤتي باربعة يوم القيامة بالمولود والمعتوه ومن مات فى الفترة وبالشيخ الفانى كلهم متكلّم بحجته ، فيقول الله تبارك وتعالى . . لعنق من جهنم . . . ابرزى فيقول لهم اني كنت ابعث الى عبادي رسلا من انفسهم واني رسول نفسي اليكم ادخلوا هذه ، فيقول من كتب عليه الشقاء . . . يا رب اتدخلنا وما كنا نعرف ، ومن كتب له السعادة فيمضي فيقتحم فيها مسرعا فيقول الله قد عصيتموني فانتم لرسلي اشدّ تكذيبا ومعصية فيدخل هؤلاء الجنة وهؤلاء النار

மறுமையில் நான்கு விதமானோர் இறைவனின் சமூகம் கொண்டு வரப்படுவர். அவர்கள்,

(1) பிறந்தவுடன் மரணித்த குழந்தை
(2) பைத்தியம் பிடித்தவன்
(3) ஃபத்ரத்துடைய காலத்தில் மரணித்தவன்
(4) வயது முதிர்ந்து மரணிக்கும் தருவாயில் இஸ்லாம் பற்றி தெரிந்தவன்

இவர்கள் யாவரும் இறைவன் சமூகத்தில் தாங்கள் இஸ்லாமை ஏற்காததின் தத்தமது சான்றுகளை முன்

வைப்பர். அப்போது அல்லாஹ், இவர்களை விடுவித் திடு என்று நரகத்திற்கு கட்டளையிட, நரகம் இவர்களை வெளியாக்கி விடும். அதன்பின்பு அல்லாஹ் அவர்களை நோக்கி உங்கள் மத்தியில் உங்களிலிருந்தே ஒரு ரசூலை அனுப்பியிருந்தேன். இப்போது நானே என் தரப்பில் ரசூலாவேன். நீங்கள் யாவரும் இந்நெருப்பில் நுழை யுங்கள் எனக் கூறுவான்.

இவர்களில் (ஷகிய்யுன்) விதி கெட்ட மூதேவிகள் எங்களின் ரப்பே, எங்களை இந்த நெருப்பில் நுழையு மாறு சொல்கின்றாயே, நாங்கள் இந்த நெருப்புக்கு பயந்தவர்களாகவே உள்ளோம் என்பர். எவர்களை அல்லாஹ் (சயீதாக) நல்லடியார்களாக பொருந்தி யுள்ளானோ அவர்கள் உடனே அந்நெருப்பில் நுழைந்திடுவர்.

பின்பு அல்லாஹ் அந்த விதி கெட்டவர்களைப் பார்த்து நீங்கள் என் முன்னிலையிலேயே என் கட்டளையை மறுக்கும் போது உங்கள் முன் தூதர் வந்தி ருந்தாலும் அந்த ரசூலை நிச்சயமாக நீங்கள் மறுத் துரைப்பீர்கள் என்பது திண்ணம். எனவே யார் (என் கட்டளையை) மறுக்கவில்லையோ அவர் சுவனபதிக்கு செல்லட்டும். நீங்கள் நரகத்திற்கு செல்லுங்கள் என்பான்.

## ஹதீது இலக்கம் ஐந்து :

ஹழ்ரத் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத் செய்வதாக ஹதீது கலை வல்லுனர் ஹழ்ரத் அப்துற் றஸ்ஸாக், ஹழ்ரத் இப்னு ஜரீர், ஹழ்ரத் இப்னு முன்திர், ஹழ்ரத் இப்னு ஹாதிம் ரஹ்மத்துல் லாஹி அலைஹிம் ஆகியோர் தமது நூட்களில் பதிவு செய்துள்ள ஹதீது.

اذا كان يوم القيامة جمع الله اهل الفترة والمعتوه والاصم

والابكم والشيوخ الذين لم يدركوا الاسلام ثم ارسل اليهم رسولا ان ادخلوا النار فيقولون كيف ولم يأتنا رسل ؟ قال: وايم الله لو دخلوها لكانت عليهم بردا وسلاما ، ثم يرسل اليهم فيطيعه من كان يريد ان يطيعه.

கியாம நாளில் அல்லாஹ், ஃபத்ரதில், பைத்தியத்தில், செவிட்டுத் தன்மையில், ஊமை நிலையில், இஸ்லாத்தை எத்தாது வயது முதிர்ந்த நிலையில் மரணித்தவர்களை ஒன்று திரட்டுவான். அதன்பின் அவர்களின் பால் ஒரு ரசூலை அனுப்பி அவர்களை நெருப்பில் நுழையுமாறு ஏவுவான். அதற்கு அவர்கள் எங்கள் சமூகத்தில் (உனது) தூதர் யாரும் வரவில்லையே என்பர்.

அல்லாஹ்வின் மீது ஆணையாக அவர்கள் அதில் நுழைந்திருப்பார்களேயானல் அது அவர்களுக்கு இன்பகரமானதாக இருந்திருக்கும் என அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறிவிட்டு நீங்கள் விரும்பினல் ''வமா குன்ன முஅத்திபீன ரசூலா'' என்ற வசனத்தை ஓதிக் கொள்ளுங்கள் என்றும் சொன்னர்கள்.

மேற்சொன்ன இந்த ஹதீது இமாம் புகாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் முஸ்லிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஆகியோரின் நிபந்தனைகளுக்குட்பட்ட ஸஹீஹான ஹதீதாகும்.

இத்தகைய ஹதீதுகளை தன் மனே இச்சை பிரகாரம் தட்டி விட முடியாது. மேலும் இந்நபிமொழி மர்ஃபூவான சட்டத்திற்கும் உட்பட்டதாகும்.

**ஹதீது இலக்கம் ஆறு :**

ஹழ்ரத் ஃதௌபான் ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் அறிவிக்க ஹழ்ரத் முஹத்தித் பஸ்ஸார் தமது முஸ்னது பஸ்ஸாரிலும், அல்லாமா ஹாகிம் தமது முஸ்தத்ரகிலும் பதிவு செய்துள்ள ஹதீது.

انّ النّبيّ صلّى الله عليه وسلّم قال : اذا كان يوم القيامة جاء اهل الجاهليّة يحملون اوثانهم على ظهورهم ، فيسألهم ربّهم فيقولون . . ربّنا لم ترسل الينا رسولا ولم يأتنا لك امر ولو ارسلت الينا رسولا لكنا اطوع عبادك . فيقول لهم ربّهم . . . ارئيتكم ان امرتكم بامر تطيعوني ، فيقولون نعم فيأمرهم ان يعمدوا الى جهنم فيدخلوها فينطلقون حتى اذا دنوا منها وجدوا لها تغيّظا وزفيرا فرجعوا الى ربّهم فيقولون ربّنا اجرنا منها فيقول لهم الم تزعموا انى لو امرتكم بامر تطيعوني ، فيأخذ على ذالك مواثيقهم فيقول اعمدوا اليها فادخلوا فينطلقون حتى اذا رأوها فرقوا ورجعوا فقالوا ربّنا فرقنا منها ولا نستطيع ان ندخلها داخرين ، فقال النبي صلى الله عليه وسلم لو دخلوها اول مرة كانت عليهم بردا وسلاما

பெருமானார் ﷺ அவர்கள் சொன்னார்கள். மறுவுலகில் மௌட்டீக காலத்தில் மரணமுற்றோர், தமது (அவர்கள் வணங்கிய) கற்சிலைகளை தங்கள் முதுகில் சுமந்தவர்களாக வருவார்கள். இவைபற்றி அவர்களது ரட்சகன் அவர்களிடம் கேட்டதும் - எம் இறைவா! நீ எங்கள் மத்தியில் (உனது) தூதரையோ உனது கட்டளையையோ அனுப்பவில்லையே! அப்படி அனுப்பியிருந்தால் நாங்கள் உனது அடியார்களில்

உனக்கு மிகவும் வழிப்பட்டவர்களாக இருந்திருப்போம் எனக் கூறுவர். அப்போது இறைவன், தற்போது நான் எதனையும் புரியுமாறு கட்டளையிட்டால் நீங்கள் அடிபணிவீர்களா? எனக் கேட்க, அதற்கு அவர்கள் சரி என்பர். அச்சமயம் நீங்கள் நரகத்தில் நுழையுங்கள் என அல்லாஹ் கூற, அதன் அருகில் செல்வர். அதனை அணுகிய போது அதன் வாடையையும், கொழுந்து விட்டெரியும் நெருப்பின் ஜுவாலையையும் கண்டு திடுக்கிட்டவர்களாக அதனுள் நுழையாது திரும்பி இறைவா! (இந்நரகை விட்டும்) எங்களை பாதுகாப்பாயாக எனக் கூறுவர்.

அச்சயம் அல்லாஹ் நான் உங்களுக்கு கட்டளையிட்டால் அதற்கு சிரம் சாய்க்க மாட்டீர்களா? என வினவ சிரம் சாய்க்கிறோம் என்று அவர்களும் கூறுவர். அதற்கான உறுதி மொழியை எடுத்தபின் மீண்டும் அதனுள் நுழையுங்கள் என கட்டளையிடுவான். திரும்பவும் அதன் அகோரத்தைக் கண்டு விரண்டோடியவர்களாக இறைவன் சமூகத்திற்கு வந்து இதற்கு நாங்கள் சக்தியற்றவர்கள் என்பர். அப்போது அல்லாஹ், அவர்களை இழிவுபடுத்தி வலுக்கட்டாயமாக (அந்நரகத்தில்) நுழைவிப்பான்.

ரசூலே அக்ரம் صلى الله عليه وسلم அவர்கள் கூறுகிறார்கள். அவர்கள் முதன் முறையிலேயே அதில் நுழைந்திருப்பார்களாயின் அதன் நெருப்பை அவர்களுக்கு சாந்திமயமானதாக ஆக்கப்பட்டிருக்கும்.

இந்த ஹதீதை தொகுத்தோரின் கருத்துப்படி இந்த ஹதீது ஸஹீஹானதாகும் என்று ஹாஃபிழுல் ஹதீத் இமாம் அபூ அப்தில்லாஹ் அல் ஹாகிம் அவர்கள் கூறுகிறார்கள். இமாம் புகாரி, இமாம் முஸ்லிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹிமா ஆகியோர் தமது நிபந்தனைகளுக்கேற்ப இந்த ஹதீதை தமது நூட்களில் இணைத்துள்ளார்கள்.

## ஹதீது இலக்கம் ஏழு :

ஹழ்ரத் முஆதுப்னு ஜபல் ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் அறிவிக்க இமாம் தப்றானி இமாம் ஹாஃபிழ் அபூ நயீம் ஆகியோர் தமது நூற்களிலேயே பதிவு செய்து வைத்துள்ள ஹதீது

عن النّبي صلّى الله عليه وسلّم قال : يؤتي يوم القيامة بالمسموح عقلا وبالهالك فى الفترة وبالهالك صغيرا فيقول المسموح عقلا يا رب لو آتيتني عقلا ما كان من آتيته عقلا باسعد لعقله منى ، وذكر الهالك فى الفترة والصغير نحو ذالك فيقول الرّب . . . انيّ آمركم بامر فتطيعوني فيقولون نعم فيقول اذهبوا فادخلواالنار ، قال ولو دخلوها ماضرتهم

ரசூல் صلى الله عليه وآله وسلم அவர்கள் கூறுதலில் அறிவற்ற பைத்தியமாக இருந்தவன் அல்லாஹ்வின் முன்னிலையில் யா அல்லாஹ்! உலகில் நீ எனக்கு அறிவைக் கொடுக்கவில்லையே! இப்போது எனக்கு அறிவு வழங்கப்படுமாயின் அதனைக் கொண்டு என்னை நற்காரியம் புரிபவனாக காண்பாய் என்பான். இவ்விதமாக ஃபத்ரத்தில் மரணித்தவனும், சிறுவயதில் மரணித்தவனும் கூறுவர். அப்போது அவர்களை நோக்கி இப்போது நான் ஏதும் கட்டளையிட்டால் அதற்கு வழிப்படுவீர்களா? என இறைவன் கேட்க, அவர்களும் சரி என்று ஒத்துக் கொள்வர். உடனே அல்லாஹ், இங்கிருந்து நகர்ந்து நரகத்தினுள் நுழையுங்கள் என்பான்.

அவர்கள் அதனுள் நுழைந்திருப்பின் அவர்களை அது தீண்டாது சாந்திமயமானதாகயிருக்கும் என நபிகள் கோமான் صلى الله عليه وآله وسلم அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் அவர்களின் புஜங்கள் துடிக்க ஆரம்பித்து விடும். அல்லாஹ்வின் படைப்புகளை அது அழித்து விடும் எனக் கருதி நுழையாது சீக்கிரமாக திரும்பிடுவர். பின்பு இரண்டாவது முறையாக ஏவப்பட்டும் நுழையாது முன் போன்றே திரும்பிவிடுவர். அப்போது அல்லாஹ், நான் உங்களை படைக்கு முன்பே உங்களில் யார் யார் வணக்கம் புரிபவர்கள்? என்பதை அறிந்தவன். அதன் பிரகாரம் தான் நீங்கள் நடப்பீர்கள். உங்களின் இறுதி முடிவை அறிந்தவன் நானே! நீங்கள் எப்புறம் நழுவிக் கொண்டிருக்கிறீர்களோ அதனையும் அறிந்தவனாவேன். இப்போது எதனை பிடித்துக் கொண்டிருக்கிறீர்களோ அதனையும் அறிந்தவனாவேன் எனக் கூறுவான்.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைப் படி நாம் கூறுவது யாதெனில், திருநபி ﷺ அவர்களின் வருகைக்கு முன் மக்கள் மத்தியில் எந்த ஒரு சட்டமும் கடமையாகவில்லை. எனவே தான் அக்கால கட்டத்தில் திருநபி ﷺ அவர்களின் வருகை அவசியமாயிற்று.

மக்கள் சிந்திக்கவும் ஆராய்ந்து உணர்ந்திடவும் போதனையும் அத்தாட்சிகளும் அவசியமாகிறது; அத்தகைய போதனைகளையும் அத்தாட்சிகளையும் நபிமார்களாகிய இறை தூதர்களால் தானே தர முடியும்! இது தவிர இறைசமூகத்திலிருந்து வந்த கட்டளைகள் அல்லாதவைகளை சிந்தித்து ஆய்வது மார்க்க சட்டப்படி கடமையல்ல. ஆனால் அவனின் சமூகத்திலிருந்து ஒரு தூதர் வருவாரேயானால் அவர் குறித்தும் அவர் கொண்டு வந்துள்ளவை குறித்தும் சிந்திப்பது அவசியத்திலும் அவசியமாகும்.

## இறைபேச்சில் கருத்து வேறுபாடு அசாத்தியம்

வாஜிபாக்கப்பட்டவைகளுக்கு இதாஅத் செய்வது கடமையேயன்றி அது குர்பத் ஆகாதே என்று சில நலன் விரும்பிகள் கேட்கின்றனர்.

ஒரு விஷயத்தில் நெருக்கம் என்பது அதனை தெளிவாக உணர்ந்த பின்பு தான் உண்டாகும். அவ்விடயத்தை குறித்து சிந்தித்து ஆராயும் போது அதனை வழிப்படுதல் என்று வேண்டுமானல் கூறலாமே தவிர நெருக்கம் என்று கூறிவிட முடியாது. இதுபற்றி எமது நாதாக்களில் ஒருவர் கூறும்போது ஒரு அழகிய கருத்தை தருகிறார்கள்.

பொதுவாக ரஸூலின் வருகைக்கு முன்பு ஒருவனின் உள்ளத்தில் பல தரப்பட்ட ஊசலாட்டங்களும் குழப்பங்களும் ஏற்படுவதற்கு இடம்பாடுண்டு. இதனல் அவனது எண்ணமும் அவன் முன் செல்லும் வழியும் நேர்மாருனதாக அமையவும் சாத்தியமுண்டு. இவ்வடிப்படைக் குழப்பத்தால் அவனில் தடுமாற்றமும் வழி தெரியா திகைப்பும் ஏற்படுகிறது. இத்தகைய வேளையில் அச்சந்தேகங்கள் தெளிவுற வேண்டி சற்று காலம் சிந்தனை செய்யாதிருப்பதும் அவசியமாகும். இச்சந்தேகங்கள் ஒரு ரசூலின் வருகைக்குப் பின்பே யன்றி நீங்க வழியில்லை.

நாம் ஒரு விஷயத்தில் தெளிவு இல்லாத நேரத்தில் நம்மிடம் ஒருவர் அது குறித்து கேட்டால் அது எனக்குத் தெரியாது என்று கூறுவது அரை அறிவாகும் என்று எமது ஆசிரியர் அபூ இஸ்ஹாக் கூறினார்கள். அதாவது எனது அறிவும், சிந்தனையும் எதுவரை சென்றுள்ளதென்றால் என் புத்தியின் எல்லைவரை என்பதாகும். அறிவின் நுட்பங்களை அறிந்து பிறர் அறியாத புத்திக் கூர்மை விஷயங்களையும் புரிந்தவர்கள் தான் இப்படி "எனக்குத் தெரியாது" என்று கூறுவர். இது பெரியோர்களின் வழக்கத்தில் உள்ள ஒன்ருகும்.

உதவி செய்தோனுக்கு நன்றிக் கடன் தீர்ப்பது அறிவின் அடிப்படையில் கட்டாயமில்லை என இமாம் ராஸி அவர்கள் தனது மஹ்சூல் எனும் கிரந்தத்தில் உரைத்துள்ளார்கள். இக்கருத்து முஃதஸிலாக்களின்

கொள்கைக்கு மாற்றமானதாகும். இதனே இங்கு கூறுவதன் நோக்கம் ரசூலின் வருகைக்கு முன் வழங்கப் பட்ட அருட்கொடைகளுக்கெல்லாம் நன்றி செலுத்து வது கடமை என்பது உறுதிபடுத்தப்படுமாளுல் அதனே செய்யத் தவறியவன் தண்டிக்கப்பட வேண்டியவன் என்பது புலனுகி விடும். ஆனுல் ரசூலின் வருகைக்கு முன் புரியப்பட்ட எதற்கும் வேதனேயில்லே.

உதவி செய்தவனுக்கு நன்றி செலுத்துவது கடமை யல்ல என்ருலும் நன்றி செலுத்துவது அவசியம் என்பதனே மனித உள்ளம் கொண்ட யாவரும் அறிவர். ரசூலின் வருகைக்கு முன் புரியப்பட்ட எதற்கும் தண்டனே இல்லே என்பதனே ''வமா குன்ன முஅத்தி பீன....'' எனும் இறைவசனமும் உறுதிப்படுத்துகிறது. அவ்வாறின்றி நபித்துவம் வருமுன் புரியப்பட்டவை களுக்கு தண்டனே வழங்கப்படுமாளுல் அது இறைவன் தான் அருளிய வாக்கிற்கே மாறு செய்வதான சந்தே கங்கள் எழுவதற்கு காரணமாகி விடும். அவ்வாறு அல்லாஹ்வின் பேச்சில் மாறுபாடு ஏற்படும் என்பது அசாத்தியமான ஒன்ருகும்.

இமாம் ஃபக்ருத்தீன் ராஸி அவர்கள் கூறியதை ''அல்ஹாஸில் வல் மஹ்ஸூல்'' நூலின் ஆசிரியர் அந்நூலிலும் இமாம் பைழாவி அவர்கள் ''அல் மின் ஹாஜ்'' எனும் நூலிலும் அங்கீகரித்து கூறியுள்ளார்கள்.

ஹழ்ரத் இமாம் காழி தாஜுத்தீன் சுபுகி ரஹ்மத்துல் லாஹி அலேஹி அவர்கள் தனது கிதாபாகிய ''ஷரஹ் முக்தஸர் இப்னில் ஹாஜிப்'' என்பதில் ''ஷுக்ருல் முன்அம்'' நல்லுதவி புரிந்தவர்களுக்கு நன்றி கடமையா? என்பது பற்றி கூறுகையில், அல்லாஹ்வின் சமூகத்திலிருந்து எந்த விதமான அழைப்பும் ஒருவனே சென்றடையாத நிலேயில் அவன் மரணமுற்றிருப்பின் அவன் ஈடேற்றம் பெற்றவன் என்பதே எம் கருத்து.

மேலும் இஸ்லாமிய சட்டப் பூர்வமாக அழைப்பு விடப்பாடதவரை யுத்தங்களும் புரியப்பட மாட்டாது.

மஆலிமுத் தன்ஸீல் எனும் நூலாசிரியர் இமாம் பகவி ரஹ்மத்துல்லாஹி அலேஹி அவர்கள் தமது "அத்தஹ்தீப்" என்ற நூலில்

من لم تبلغه الدّعوة فلايجوز قتله قبل ان يدعى الى الاسلام وجب في قتله اليه والكفارة

இஸ்லாமின் பகிரங்க அழைப்பு சென்றடையாத ஒருவனேயும், இஸ்லாமின் பால் பகிரங்க அழைப்பு விடப்படாதவரை எவரையும் சொலே செய்திட முடியாது. இஸ்லாமின் பால் அழைப்பு விடப்படுமுன் எவனுகிலும் கொலே செய்யப்படுவாறுகில் அவனின் குடும்ப அங்கத்தவருக்கு நஷ்டஈடு அல்லது அதற்கு (கொலேக்கு) பரிகாரமான ஒன்று தருவது கொலே செய்தவனுக்கு கடமையாகும்.

இமாமுல் அஃழம் அவர்கள் அவ்விதம் கொலே செய்யப்பட்டவனுக்காக தண்டனே அல்லது நஷ்டஈடு தரும் விஷயத்தில் ஒரு முஸ்லிம் அவனுக்கு சாட்சியாக இருப்பது அவசியமில்லே என்கிறபோது வெட்டப் பட்டவனுக்காக நஷ்டஈடு கொடுப்பதும் கடமையல்ல என்றும் கூறுகிருர்கள். இமாம் ராபிஃ அவர்கள் அஷ் ஷரஹ் எனும் தனது நூலில்

من لم تبلغه الدّعوة لايجوز قتله قبل الاعلام والدعاء الى الاسلام ولو قتل كان مضمونا خلافا لأبى حنيفة

இஸ்லாமின் பக்கம் அழைக்காமலும் அதனே பகிரங்கமாக ஆக்காத வரையிலும் யாரையும் கொலே செய்திட முடியாது. அப்படி யாராவது கொலே செய்யப்பட்டால் கொலே செய்த ஒருவனே அதற்கு பிணே ஏற்க வேண்

டும். ஆனால் கொலை செய்தவன் பொறுப்பாளியாக மாட்டான் என இமாம் அபூ ஹனீஃபா அவர்கள் கூறி யுள்ளார்கள். இமாம் அபூ ஹனீஃபா, இமாம் ஷாஃபீ ஆகியோரின் கருத்து மாற்றத்தின் காரணம் குறித்து ஆராய்கையில் ஷாஃபீ மத்ஹபின் படி அவனுடைய அறிவினால் ஹுஜ்ஜத்து அவனுக்கு சம்பூரணமாகி விட்டது. அதனால் அவன் புரியும் செயல்களுக்கு அவனே பொறுப்பாளி. ஹனஃபி மத்ஹபின் பிரகாரம் அவனை இஸ்லாத்தின் அழைப்பு சென்றடையவில்லை. ஆகையால் அவனை பொறுத்தமட்டில் இறை கலாமின் "வமா குன்னா முஅத்திபீன" பிரகாரம் ஹுஜ்ஜத்து பூர்த்தியாகவில்லை என்பதாகும். ஆகையால் அவன் எதற்கும் பொறுப்பாளியாக மாட்டான்.

இமாம் கஸ்ஸாலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர் கள் அல் பசீத் எனும் நூலில் ஒருவனுக்கு இஸ்லாத்தின் அழைப்பு சென்றடையாத நிலையில் அவன் கொலை செய்யப்படுவானேயானால் அதனை புரிந்தவன் நஷ்ட ஈடு தொகுக்கப்பட வேண்டுமேயன்றி பழிக்குப்பழி (கியாஸ்) கடமையல்ல. நஷ்டஈடு வழங்கப்படுவதற்கு காரணம் யாதெனில் அவன் முஸ்லிமாக கருதப்படுவது தானே அன்றி அவன் உண்மை முஸ்லிம் அல்ல.

இதுகுறித்து அல்லாமா ரிஃப்ஆ அவர்கள் "அல் கிஃபாயா" எனும் நூலில் இதுபற்றி இன்னும் சற்றுத் தெளிவுபடுத்துகையில் அவன் ஃபத்ரத்தின் எல்லையில் தான் பிறந்துள்ளான். அவன்மூலம் இஸ்லாத்திற்கு எதிர்ப்போ, வெறுப்போ, குரோதமோ வெளியாக வில்லை என்பதினாலே அவன்மீது நஷ்டஈடு தான் உண்டாகுமேயன்றி பழிக்குப் பழியல்ல.

இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "ஷரஹ் முஸ்லிம் ஷரீபில்" இறை மறுப்பாளர்கள்

மற்றும் இணை வைப்போர்களின் குழந்தைகளைப் பற்றி எழுதும் போது முஹக்கிகீன்களின் ஏகோபித்த முடிவின் படியும் ஏற்கத்தக்க மத்ஹபுகளின் படியும் அக்குழந்தைகள் சுவர்க்கத்திலே! என்று குறிப்பிட்டு விட்டு அதற்கு ஆதாரமாக "வமா குன்னா முஅத்திபீன" எனும் இறை வசனத்தை குறிப்பிடுகிறார்கள்.

இஸ்லாமிய அழைப்பு வாலிப பருவத்தை அடைந்த ஒருவனை சென்றடையாத நிலையில் அவனே தண்டிக்கப் பட மாட்டான் என்றால் அவனல்லாதவன் வேதனை செய்யப்படாமலிருக்க மிகவும் தகுதியானவன் என்றும் இமாம் நவவி குறிப்பிடுகிறார்கள்.

فان قلت هذا المسلك الذى قدرته هل هو عام فى اهل الجاهلية كلهم ؟ قلت لا بل هو خاص لمن لم تبلغه الدعوة نبي اصلا اما من بلغته منهم دعوة احد من الانبياء السابقين ثم اصر على كفره فهو فى النار قطعا

மேற்கூறிய இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கூற்றின்படி மௌட்டீகக் காலத்தில் மரித்தோர் யாவருக்கும் இச்சட்டம் உரித்தானதா? என்று கேட்பீர்களாயின் அதற்கு நான்கூறும் பதில் யாதெனில் இல்லை என்பதே. என்றாலும் எவனுக்கு அறவே எந்த நபியின் அழைப்பும் சென்றடைய வில்லையோ அப்படியானோருக்கே சொந்தம்.

ஆனால் முன்சென்ற எந்த நபியின் அழைப்பாயினும் ஒருவனை சென்றடைந்த பின் அவன் அதனை ஏற்காமல் அவன் கொண்ட கொள்கையிலேயே இருப்பானாகில் அவன் செல்லும் இடம் நரகம் தான் என்பதில் சந்தேகமில்லை.

# நபி ﷺ அவர்களின் பெற்றோர் நிலை

எம் கோமான் நபிகள் பூமான் ﷺ அவர்களின் பெற்றோரின் நிலையோ மிகவும் வெளிப்படையானதும் தெளிவானதும் ஆகும். எவர்களை கடைசி வரை எந்த ஒரு நபிகளின் அழைப்பும் சென்றடையவில்லையோ அவர்களிலே இவர்களும் இடம் பெறுகின்றனர். இவர்களுக்கும் முந்திய நபிமார்களுக்கும் இடையில் நீண்ட நெடிய கால தூரம் உள்ளது. எங்கள் கோமான் ﷺ அவர்களுக்கு முந்தி வந்த நபிமார்களுள் இறுதியாக வந்தவர்கள் ஹழ்ரத் ஈஸா அலைஹிஸ் ஸலாமவர்கள் ஆவார்கள்.

நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும் எம் அருமை பெருமானார் ﷺ அவர்களின் நபித்துவம் வெளிப்படுவதற்கும் இடைபட்ட காலதூரம் சுமார் 600 வருடங்களாகும்.

இவ்விரு நபிமார்களுக்கும் இடைப்பட்ட கால எல்லையை கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடைபட்ட தொலை தூரம் எனக் கூறலாம். இக்கால இடைவெளியில் எங்கிருந்தும், எவ்வழியேனும், எந்த ஒரு இஸ்லாமிய சட்டம் பற்றிய தகவலும் கிடைக்க சந்தர்ப்பமேயில்லை.

இக்காலத்தில் ஷரீஅத்தை அறிந்தவர்கள் யாரும் இருக்கவில்லை. எனினும் ஷாம் (சிரியா) போன்ற நாடுகளில் இலைமறை காயாய் வேதத்துடைய சில அறிஞர்கள் இருந்துள்ளார்கள். இத்தகையவர்களை தெரிந்தவர்கள் மிக சொற்பமானவர்களே. இவர்களைப்பற்றி செய்தியேனும் கிடைத்து அவர்களை அணுகிட நபிகளின் பெற்றோர் நீண்ட காலம் வாழவும் இல்லை. சந்தேகமற

எம் பெருமானார் நபிகள் ﷺ அவர்களின் பெற்றோர் மிகக் குறுகிய கால உலக வாழ்வையே பெற்றிருந்தார்கள்.

இமாம் ஹாஃபிழ் ஸலாஹுத்தீன் அலாயீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "அத்துர்ருஸ்ஸனிய்யா ஃபீ மௌலிதி ஸெய்யிதில் பரிய்யா" எனும் நூலில்

திருநபி ﷺ அவர்களின் நூர் (ஒளிப்பிழம்பு) ஹழ்ரத் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் முதுகெலும்பிலிருந்து அன்னை ஆமினா நாயகி ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் கருவறையை சென்றடைந்த சமயம் ஹழ்ரத் அவர்கள் 18 வயது நிரம்பியவர்களாகத்தானிருந்தார்கள். அன்னையரின் வயதும் இதற்கு உவப்பாகவே இருந்தது.

திருமணம் முடிந்த சில காலத்தில் ஹழ்ரத் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு வியாபார நோக்கில் யஃத்ரிப் (மதீனா) நோக்கி தம் கோத்திரத்தைச் சார்ந்த தனது சாச்சி (சிறிய தாய்) மார்களின் கிராமத்தில் வஃபாத்தாகி விட்டார்கள். அச்சமயம் அன்னை ஆமினா ரலியல்லாஹு அன்ஹா நூரே முஹம்மதிய்யாவை தனது கருவறையில் சுமந்தவர்களாயிருந்தார்கள்.

இது ஒருபுறமிருக்க அன்றைய கால மக்கள் குறிப்பாக மக்காவாசிகள் முந்தைய நபிமார்களை குறித்து எந்த ஒரு செய்தியையும் அறிந்திருக்கவில்லை என்பதனை நபிகள் பூமான் ﷺ அவர்கள் நபியாக அனுப்பப்பட்ட போது, தனது நபித்துவத்தை அங்கீகரித்து தன்னை நபியாக ஏற்றுக் கொள்ளுமாறு வள்ளல் எம் நபிகள் கூறியபோது அம்மக்கள், எங்கள் மூதாதையர்களிடம் நாங்கள் கேட்டது போன்று மலக்கை அனுப்பாது ஒரு மனிதரையா இறைவன் தூதராக்க வேண்டும் என்று

ஆச்சரியத்துடன் கேட்டார்கள். அத்துடன் அவர்கள் ஒரு மனிதர் என்ற நிலையில் அவர்களை ஏற்கவும் மறுத்தார்கள்.

இது இஸ்லாம் குறித்தோ இறைதூதர் குறித்தோ அவர்கள் எதுவும் அறிந்திருக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

## மறுத்திருக்க மாட்டார்கள்

இதிலிருந்து அந்த குறைஷி முஷ்ரிக்கீன்களுக்கு நபி மார்களைப் பற்றிய அறிவு இல்லை என்பதும், இருந்திருந் தால் இத்தகைய கேள்விகளைக் கேட்காது அருள்நபி ﷺ அவர்கள் தனது நபித்துவத்தை வெளிப் படுத்தியவுடன் மறுக்காது ஏற்றிருப்பார்கள் என்பதும் தெளிவாகிறது.

சிலவேளை அம்மக்காவாசிகள் தங்களை நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் கொண்டு வந்த மார்க்கத்திலே இருப்பதாக நினைத்திருக்கலாம். ஆனால் உண்மையில் அந்த மார்க்கத்தில் அவர்கள் இருக்கவு மில்லை. அந்த மார்க்கத்தை எடுத்துக் கூறக்கூடிய யாரும் இருக்கவுமில்லை. அந்த மார்க்கத்தை எடுத்துக் கூறக் கூடிய, பரப்பக் கூடிய, உலமாக்கள் காலம் முடிந்து போயிருந்தது. நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர் களின் காலத்திற்கும் இவர்களின் காலத்திற்கும் இடையே சுமார் மூவாயிரம் வருடங்களுக்கும் அதிக மான கால இடைவெளி இருந்தது. இத்தகைய காலத்தில் தான் கண்மணி நாயகத்தின் சுந்தர பெற்றோர் வாழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஷெய்கு இஸ்ஸுத்தீன் இப்னு அப்திஸ் ஸலாம் அவர்கள் தன் அமாலியா எனும் நூலில் குறிப்பிடும் போது

كل نبي انما ارسل الى قومه الا نبينا صلى الله عليه وسلم قال فعلى هذا يكون ما عدى قوم كل نبي من اهل الفترة الا ذرية النبي السابق فانهم مخاطبون ببعثة السابق الا ان تدرس شريعة السابق فتصير الكل من اهل الفترة

இதிலிருந்து நாம் விளங்கியது யாதெனில் திருநபி ﷺ அவர்களினது சந்தன பெற்றோர் சந்தேக மின்றி ஃபத்ரத்தின் காலத்தை சார்ந்தவர்கள் என்பதே. நிச்சயமாக இவ்விருவரும் ஹழ்ரத் நபி ஈஸா அலைஹிஸ் ஸலாமவர்களின் கூட்டத்தாரையோ அல்லது அக்கூட் டத்தின் வம்சா வழியையோ சார்ந்தவர்கள் அல்லர்.

ஹழ்ரத் இமாம் இஸ்ஸுத்தீன் அவர்கள், ஹாஃபி ழுல் அஸர், அபுல் பழ்ல், இப்னு ஹஜரில் அஸ்கலானி அவர்களின் வார்த்தைகளை அலங்கரித்த வண்ணம் கூறும் போது திருநபியவர்களின் அருமைப் பெற்றோர் கீழ்வரும் இரண்டு அம்சங்களில் உட்படுவர் என்பது திண்ணம் என்கின்றனர்.

### முதல் அம்சம்

இமாம் அபூ அப்தில்லாஹ் ஹாகிம் ரஹ்மத்துல் லாஹி அலைஹியவர்கள் "அல் முஸ்தத்ரக்" எனும் நூலில் ஹழ்ரத் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அறிவத்ததாக கூறும் ஸஹீஹான ஹதீதாகும்.

قال شاب من الانصار لم ار رجلا كان اكثر سؤالا لرسول الله صلى الله عليه وسلم منه . يا رسول الله ارأيت ابويك في النار ؟

நபிகள் நாயகம் ﷺ அவர்களிடம் அதிகமான கேள்விகளைக் கேட்கும் அன்ஸாரி வாலிபர் ஒருவர்,

அல்லாஹ்வின் தூதரே! உங்களின் அருமைப் பெற்றோர் நரகவாதிகள் என்று கருதுகிறீர்களா? எனக் கேட்ட போது இது சம்பந்தமாக எனது ரப்பிடம் நான் கேட்டதில்லே. எனினும் நான் மறுமையில் மகாமுல் மஹ்மூதில் நிற்பேன் என்றார்கள்.

இந்நபிமொழியிலிருந்து தெளிவாகக்கூடியது யாதெனில் வள்ளல் கண்மணி ﷺ அவர்கள் மகாமுல் மஹ்மூதில் நிற்கும்போது தனது உம்மத்திற்காக ஷஃபாஅத் செய்வார்கள். இதில் குறிப்பாக பெரும் பாவிகளும் அடங்குவர். இச்சமயத்தில் தனது பெற்றோர் விஷயத்தில் நிச்சயம் நல்லதையே கருதி அவர்களுக்காக ஷஃபாஅத்தும் செய்வர். மேலும் அப்பெருமக்கள் இருவரும் அஹ்லெ ஃபத்ரத்தின் பரீட்சையின் போதும் வெற்றிபெற்று அல்லாஹ்வை ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் சந்தேகிக்க முடியாது.

அதிலும் குறிப்பாக மகாமுல் மஹ்மூத் என்ற தலத்தில் அருமை நபி நபிகள் நாயகம் ﷺ அவர்கள் வந்தமரும் போது அவர்களை நோக்கி

سل تعط واشفع تشفع

எனதருமை அன்பரே! கேளுங்கள் தரப்படும். பரிந்துரையுங்கள் ஏற்கப்படும் என அல்லாஹ் கூறுவான். இச்சமயத்தில் உலகமே உய்விக்க வந்த தன்னைச் சுமந்து நின்ற அந்த சுந்தர பெற்றோருக்காக சிபாரிசு செய்ய மாட்டார்களா என்ன?

### இரண்டாவது அம்சம்

இமாம் இப்னு ஜரீர் அவர்கள் தனது தப்ஸீரில் ''வலஸௌவ்ஃப யுஃதீக ரப்புக ஃபதர்ளா'' எனும் திருமறை வசனத்திற்கு விளக்கமளிக்கையில் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்

கூறிய கருத்தை கூறுவதாகும்.

قال من رضى محمد صلى الله عليه وسلم ان لايدخل احد من اهل بيته النار

நபிகளார் ﷺ அவர்களின் திருப்பொருத் தங்களில் அவர்களது குடும்ப அங்கத்தவர்களில் எவரும் நரகில் நுழையக் கூடாது என்பதும் ஒன்ருகும்.

இந்த ஹதீதின் அடிப்படையில் ஹாஃபிழ் இப்னு ஜரீர் அவர்கள் விளக்கம் கூறுகையில்,

நபிகள் பிரான் ﷺ அவர்களின் குடும்பத் தினர் எல்லோரும் பரீட்சையில் ஜெயம் பெறுவார்கள் என எண்ணம் கொள்வது அவசியம் என குறிப்பிடு கிருர்கள்.

இவையல்லாமல் இன்னும் சில ஹதீதுகளும் உள்ளது. அதில் ஒன்று இதனே இம்ரான் இப்னு ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறி விக்க அல்லாமா அபூ ஸயீத் தன் ஷரஹுன் நுபுவ்வா எனும் நூலிலும் அல்லாமா முல்லா அவர்கள் தன் சீரத்திலும் பதிவு செய்துள்ளார்கள். அதாவது

سألت ربي ان لايدخل النار احدا من اهل بيتى فاعطاني ذالك

அண்ணல் நபி ﷺ அவர்கள், நான் எனது ரப்பிடம் என் குடும்பத்தில் எவரையும் நரகத்தில் நுழைப் பிக்கக் கூடாது எனக் கேட்டேன். அதனே அவன் ஏற்றுக் கொண்டான் என்று கூறினர்கள்.

இமாம் தமீமுத் தாரமீ அவர்கள், ஹழ்ரத் அப்துல் லாஹ் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்

மூலமாக கிடைக்கப் பெற்ற நபிமொழியை முயீஃபுடைய ஸனதுடன் அல் ஃபவாயித் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது

قال رسول الله صلى الله عليه وسلم اذا كان يوم القيمة
شفعت لابي وامي وعمي ابي طالب واخ لي كان في الجاهلية

நான் கியாம நாளன்று என் தாய், தந்தை, எனது சாச்சா அபூதாலிப் ஆகியோருக்கும் மௌட்டீக காலத்தில் மரணமுற்ற என் சகோதரருக்கும் அல்லாஹ்விடம் ஷஃபாஅத் எனும் மன்றாட்டம் புரிவேன் என நபிகள் திலகம் ﷺ அவர்கள் கூறினார்கள் என்பது மற்றொன்றாகும்.

பெரும் மார்க்க அறிஞர்களில் ஒருவரும் ஹதீதுக் கலை ஆராய்ச்சியில் மாபெரும் நிபுணருமான அல்லாமா முஹிபுத்தீன் திப்ரி அவர்கள் ''தகாயிருல் உக்பா'' எனும் தனது நூலில்,...

மேற்குறிப்பிட்ட நபிமொழி ஸஹீஹானது என நிரூபிக்கப்பட்டு விட்டால் ''நரகில் அபூதாலிபுக்கு வேதனை இலகுவாக்கப்படும்'' என்ற ஹதீதுக்கு (தஃவீல்) வலிந்துரை செய்ய வேண்டியது ஏற்படும். இதில் அபூதாலிபின் பேரிலே வந்த வார்த்தைக்கு மட்டுமே வலிந்துரை செய்ய வேண்டுமே தவிர பெருமானார் ﷺ அவர்களின் அருமைப் பெற்றோர் மற்றும் (பால்குடி) சகோதரர் மீது வந்த வார்த்தையை வலிந்துரை செய்ய வேண்டியதில்லை. அவர்கள் தாம் நபித்துவம் வெளிப்படுத்தப்பட்ட காலத்தில் வாழ்ந்தும் இஸ்லாமை ஏற்காதவர், மற்றவர்கள் ஃபத்ரத்துடைய காலத்திலேயே மரணித்தவர்கள் எனக் குறிப்பிடுகிறார்கள்.

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்த ழயீஃபான ஹதீது மற்றுமொரு வழியாக மிகவும் பலகீனமான ஸனதுடன் வந்திருப் பதைக் கவனிக்க முடிகிறது. இதனை அபூநயீம் போன் ரோர் குறிப்பிடுகிரார்கள். ஒரு ழயீஃபான ஹதீது பல வழியாக அறிவிக்கப்படுமானல் அது ஸஹீஹானதாக ஆகிவிடும் என்பதனை ஹதீதுகலை அறிவுள்ளோர் நன்கறிவர்.

இதுபோன்ற ஒன்றையே இமாம் ஹாகிம் அவர்கள் முஸ்தத்ரக் எனும் நூலில் ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிப்ப தாக ரிவாயத் செய்துள்ளார்கள்.

ஹழ்ரத் தைலமீ அவர்கள் ஹழ்ரத் இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக குறிப் பிடும் ஒன்ருகிறது

قال رسول الله صلّى الله عليه وسلّم اول ما اشفع له يوم القيمة اهل بيتي ثم الاقرب فالأقرب

கியாம நாளில் நான் முதலாவதாக எனது குடும்பத் தாருக்கும், பின்னர் நெருங்கியோருக்கும், அதன் பின் சற்று நெருங்கியோருக்கும் ஷஃபாஅத் செய்வேன் என நபிகள் பெருமானர் ﷺ அவர்கள் திருவுள மானர்கள்.

முஹிப்புத்தீன் திப்ரீ அவர்கள் ''தகாயிருல் உக்பா'' எனும் நூலிலும் இமாம் அஹ்மது ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தன் மனகிபிலும், ஹழ்ரத் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்துள்ளதை குறிப்பிடும் போது

قال رسول الله صلّى الله عليه وسلّم يامعشر بنى هاشم والّذي بعثني بالحق نبيّا لو أخذت بحلقة الجنّة مابدأت الابكم

திருநபி ﷺ அவர்கள் பனூ ஹாஷிம் குலத்தாரை விளித்து பனூ ஹாஷிம்களே! என்னை நபியாக அனுப்பியவன் மீதாணையாக, சுவனத்திற்கு (மக்களை) அழைத்துச் செல்லும் சுற்று வந்ததும் உங்களைக் கொண்டு தான் ஆரம்பிப்பேன்.

மற்றுமொரு ஹதீதினை இமாம் கதீப் அவர்கள் ''தாரீக் பக்தாத்'' எனும் நூலில் ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மூலமாக ரிவாயத் செய்துள்ளார்கள். இதனை அபுல் பஹ்தரீ கூறியதாகவும் அவர்களுக்கு ஜாபிர் இப்னு அப்தில்லாஹ் கூறியதாகவும் கூறுகிறார்கள்.

பூமான் நபி ﷺ அவர்கள் கூறினார்கள். என்னால் என் குடும்பத்தாருக்கு எந்த பிரயோசனமும் கிடையாது எனக் கருதுவோரின் நிலை என்னவாகும்? என்னால் என் குடும்பம் பிரயோஜனம் பெறுவதோடு (அப்பிரயோஜனம்) எமன் நாட்டு ஒரு கோத்திரம் வரை சென்றடையும் என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளட்டும்.

அல்லாஹ் எனக்கு ஷஃபாஅத் செய்வதற்கான அனுமதி வழங்கியதும் நான் மன்றாடுவேன். அத்துடன் யாருக்கெல்லாம் ஷஃபாஅத் புரிய வழங்குமாறு நான் கேட்பேனோ அவர்களும் மன்றாடும் அனுமதியைப் பெறுவர். அப்படி பலர் மன்றாடுவதைக் காணும் ஷைத்தான் தானும் மன்றாட பேராவல் கொண்டவனாயிருப்பான்.

இதனைப் போன்று ஒரு அறிவிப்பை இமாம் தப்ரானி

அவர்கள் ஹழ்ரத் உம்முஹானீ மூலமாகக் கிடைக்கப் பெற்றதாகக் குறிப்பிடுகின்றார்கள். அதாவது,

எனது மன்றாட்டம் என் குடும்பத்தினருக்கு கிடைக் காது எனக் கருதுவோரின் நிலை என்னவாகும்? என் மன்றாட்டமோ ஹிகம் என்ற கோத்திரம் வரை சென்றடையும் என நபியுல்லாஹ் ﷺ அவர்கள் கூறினார்கள்.

அல்லாமா ஸர்கஷி அவர்கள் 'அல்காதீம்' எனும் நூலில் ஹழ்ரத் இப்னு திஹ்யா மூலமாக அறிவிப்புச் செய்ததாகிறது.

மன்றாட்டத்தின் வகைகளில் அபூலஹபிற்கு திங்கள் தோறும் வேதனை இலகுவாக்கப்படுவதும் ஓர் வகையாகும். ஏனெனில் அவரின் பணிவிடையாளா யிருந்த துவைபா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் முத்து நபி ﷺ அவர்கள் உதித்த செய்தியை அவருக்கு கூறியதும், மகிழ்ச்சியின் உச்சத்தில் அபூ லஹப் துவைபா ரலியல்லாஹு அன்ஹா அவர்களை விடுதலை செய்து விட்டார். அக்காரியத்தைப் புரிந்ததால் அவருக்கு இந்த வாய்ப்பு கிடைத்தது என்று குறிப் பிட்டுள்ளார்.

இதனைத் தவிர இவ்விஷயம் சம்பந்தமாக இமாம் அப்துல்லாஹ் முஹம்மத் பின் கலபுல் உபை ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் 'இன்ன அபீ வஅபாக பின்னார்' நிச்சயமாக என் தந்தையும் உன் தந்தையும் நரகிலே என வந்துள்ள முஸ்லிம் ஷரீஃபின் ஹதீது ஷரஹ் முஸ்லிமில் அழகிய நடையில் விளக்கமளித்துள் ளதை பார்த்துள்ளேன் என்றார்கள்.

இமாம் நவவி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்லான எவன் காபிராக மரித்தானோ அவன் நரக

வாதியாவான். அவனது நெருங்கியோரால் அவனுக்கு எப்பிரயோசனமும் கிடைக்க மாட்டாது என்பதை பொதுப்படையாக பார்த்துக் கொள் என்ருர்கள். இமாம் சுஹைலி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களோ, நாம் எதற்காக இப்படியான பேச்சுக்களை குறிப்பிட வேண்டும் நபிகளார் ﷺ அவர்களோ,

لاتؤذوا الاحياء بسبب الاموات

மரித்தோரை ஏசுவது கொண்டு உயிருள்ளோரை நோவினை செய்யாதீர்கள் என்று கூறுகிருர்கள் என்று கூறிவிட்டு வல்ல அல்லாஹ் தன் வான்மறையில் நிச்சயமாக அல்லாஹ்வையும் அவனது தூதரையும் எவர் நோவினை செய்கிருரோ அவருக்கு நொம்பலம் தரும் வேதனையை சித்தப்படுத்தியுள்ளேன் என்று கூறுகிருன் என்றும் குறிப்பிட்டார்கள்.

அத்துடன் நபிகள் கோமான் ﷺ அவர்களின் பெற்ருேர் உயிர்ப்பிக்கப்பட்டு அவர்கள் திருக்கரத்தில் ஈமான் கொண்ட செய்தியும் ஸஹீஹானதாக ஆக முடியும் தானே எனவும் இயம்பினுர்கள்.

நபிகள் பெருமாஞர் ﷺ அவர்களின் அந்தஸ்து மேன்மையும் மகத்துவமும் மிக்கதாகும். அல்லாஹ்வை எப்பொருளும் (ஆஜிஸ்) இயலாமலாக்க முடியாது என்றபின், இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கூற்றில் உள்ள கருத்தை சற்று அலசிப் பார்த்தால்,

எவனெருவன் ஃபத்ரத்துடைய காலத்தில் மரித்தானே அவன் அக்கால அரபியர்களைப் போன்று சிலை வணக்கம் புரிந்தவனுயிருப்பின் அவன் செல்லும் இடம் நரகம் தான் என்கிறது அவர்களுடைய கருத்து. இதனல் இஸ்லாமிய அழைப்பு விடப்படுமுன்னர் மரணித்தோர்

எல்லோரும் வேதனை செய்யப்படுவார்கள் என்பதல்ல. மாறாக அவ்வாறு வேதனை செய்யப்படுபவர்கள் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் போன்ற ரசூல்மார்களின் அழைப்பு சென்றடைந்த பின்பு சிலைவணக்கம் புரிந்தவர்கள் ஆவார்கள். இதைத்தான் இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் கருத்து வெளிப்படுத்துகிறதே அன்றி வேறல்ல என்பது புரியும்.

யாரை தஃவத் சென்றடைந்ததோ அவர்களை அஹ்லு ஃபத்ரத் எனக் கூறமுடியாது. இரண்டு ரசூல் மார்களுக்கிடைப்பட்ட காலத்தில் முந்திய ரசூல்கள் பற்றிய தகவலோ பிந்திய ரசூலின் நபித்துவ வெளிப்பாடோ யாரை அடையவில்லையோ அவர்களையே ஃபத்ரத்துடையவர்கள் எனக் குறிப்பிடப்படும்.

பொதுவாக மார்க்கக் கலை சட்ட வல்லுனர்களான ஃபுகஹாக்கள் ஃபத்ரத் பற்றி குறிப்பிடும் போது நபி ஈஸா அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும் எம் கண்மணி நாயகம் ﷺ அவர்களுக்கும் இடைப்பட்ட காலத்தையே கருத்தில் கொள்கின்றனர்.

மொத்தத்தில் உறுதியான ஆதாரம் நிலை நாட்டப் படாத வரை வேதனை அளிக்கப்பட மாட்டாது என்ற அடிப்படையில் அக்காலத்தில் வாழ்ந்தவர்களும் வேதனை செய்யப்பட மாட்டார்கள். இவர்கள் போன்றல்லாதோரை ஃபத்ரத்தில் வாழ்ந்தவர்களாக கொண்டால் இவர்களை முஷ்ரிகீன்களாக (நஊதுபில்லாஹ்) கூற நேரிடும். அந்நிலையில் இவர்கள் அவர்களது காலத்தில் உயர்ந்தவர்களாக கருதப்படவில்லை என்று எண்ணவும் சாத்தியமேற்படும்.

இப்படியொரு முடிவு ஏற்பட்டால் அம்முடிவு நபி மொழிகளுக்கு நேர்மாறானதாகி விடும். எனவே இம்

முடிவு மறுக்கப்பட வேண்டியதும் ஒதுக்கப்பட்ட வேண்டியதுமாகும்.

## நபிகளின் மூதாதையர்கள் அக்கால மக்களில் சிறந்தவர்கள்

1. ஹழ்ரத் அபூ ஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிப்புச் செய்துள்ள ஹதீதை இமாம் புஹாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது ஸஹீஹுல் புகாரிஷ் ஷரீஃபில் பதிவு செய்துள்ளார்கள்.

قال رسول الله صلّى الله عليه وسلّم بعثت من خير قرون بني آدم قرنا فقرنا حتّى بعثت من القرن الذي كنت فيه

நான் நபியாக அனுப்பப்படும் வரை ஆதமுடைய மக்களில் மிகச் சிறந்தோர் மத்தியிலே நான் காலங்காலமாக அனுப்பப்பட்டுக் கொண்டிருந்தேன்.

2. ஹழ்ரத் அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீதை இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தலாயிலுந் நுபுவ்வா எனும் கிரந்தத்தில் பதிவு செய்துள்ளார்கள்.

انّ النبيّ صلّى الله عليه وسلّم قال ما افترق النّاس فرقتين الاّ جعلني الله في خيرهما فاخرجت من بين ابوي فلم يصبني شيئ من عهد الجاهلية وخرجت من نكاح ولم أخرج من سفاح من لدن آدم حتى انتهيت الى ابي وامي فانا خيركم نفسا وخيركم ابا

மனிதர்கள் இருபிரிவினர்களாக பிரிந்த போதெல்லாம் என்னை அல்லாஹ் அவர்களில் சிறந்தோரிலேயே ஆக்கினான். மௌட்டீக காலம் என்னில் பங்கு கொள்

ளாத நிலையில் நான் எனது பெற்றோர் மூலமே வெளி யாக்கப்பட்டேன். மேலும் நான் என் பெற்றோரை வந்தடையும் வரை திருமண வழிமுறைப்படித்தான் நான் வெளியானேனேயன்றி ஆதமுடைய மக்களில் இரத்த வெறி பிடித்தவர்களில் நின்றும் நான் வெளியாக வில்லை. நான் உங்களில் சிறந்தவன். எனது பெற்றோ ரும் சிறந்தவர்களே!

3. ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத் செய்யும் ஹதீதை ஹழ்ரத் அபூ நயீம் அவர்கள் தலாயிலுந் நுபுவ்வாவில் குறிப்பிடுகிறார்கள்.

قال النبيّ صلّى الله عليه وسلّم لم يزل الله ينقلني من الاصلاب الطّيبة الى الارحام الطاهرة مصفى مهذبا لاتنشعب شعبتان الّا كنت في خيرهما

அல்லாஹ் என்னை கலப்பற்ற முதுகெலும்புகளி லிருந்து பரிசுத்த கர்ப்பறைகளுக்கு மிக அழகிய வடிவில் தெளிந்து தேர்ந்தெடுத்து நீங்காது தடையின்றி திருப் பிய வண்ணமாயிருந்தான். மக்கள் பிளவுபட்டு இரு பிரிவாகும் போது என்னை அவர்களில் சிறந்தோரில் ஆக்கிக் கொண்டுமிருந்தான் என நபிகள் நாயகம் صلى الله عليه وسلم அவர்கள் கூறுகிறார்கள்.

4. ஹழ்ரத் வாதிலா ரலியல்லாஹு அன்ஹு அவர் கள் அறிவிப்புச் செய்து முஸ்லிம் ஷரீஃபிலும் திர்மிதி ஷரீஃபிலும் ஸஹீஹான சனதுடன் பதிவு செய்யப் பட்ட ஹதீது

قال رسول الله صلى الله عليه وسلم ان الله اصطفى من

ولد آدم اسماعيل واصطفى من ولد اسماعيل بنى كنانة
واصطفى من بنى كنانة قريشا واصطفى من قريش بنى هاشم
واصطفني من بنى هاشم

அல்லாஹ் ஹழ்ரத் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களின் பிச்சளத்தில் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாமவர்களையும் அவர்கள் சந்ததியிலிருந்து பனூ கினுனவையும், பனூ கினுன கோத்திரத்திலிருந்து குறைஷி குலத்தையும், குறைஷி குலத்திலிருந்து பனூ ஹாஷிமையும், பனூ ஹாஷிமிலிருந்து என்னையும் தேர்ந்தெடுத்தான் என எம்பிரான் ﷺ அவர்கள் அருளினுர்கள்.

5. ஹாஃபிழ் அபுல் காஸிம் ஹம்சா இப்னு யூசுஃப் அஸ்ஸாஹ்மீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஹழ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சிறப்புகளை உள்ளடக்கிய "ஃபழாயிலு அப்பாஸ்" எனும் நூலில் ஹழ்ரத் வாதிலா இப்னு அஸ்கஃ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்ததை இப்படி குறிப்பிட்டுள்ளார்கள்.

ان الله اصطفى من ولد آدم ابراهيم واتخذه خليلا
واصطفى من ولد ابراهيم اسماعيل ثم اصطفى من ولد اسماعيل
نزار ثم اصطفى من ولد نزار مضر ثم اصطفى من مضر كنانة ثم
اصطفى من كنانة قريشا ثم اصطفى من قريش بنى هاشم ثم
اصطفى من بنى هاشم بنى عبد المطلب ثم اصطفاني من بنى عبد
المطاب

அல்லாஹ் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களின்

மக்களில் ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை தேர்ந்தெடுத்து (தனது) நேசராகவும் ஆக்கிக் கொண்டான். ஹழ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் குழந்தைகளில் நபி இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாமவர்களையும், ஹழ்ரத் நபி இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாமவர்களின் வழித்தோன்றலில் நிஸார் குலத்தையும், நிஸார் குலத்தில் முழர் குடும்பத்தினரையும், முழரிலிருந்து கினுனு குலத்தையும், கினுனுவிலிருந்து குறைஷிகளையும், குறைஷிகளில் பனீ ஹாஷிமையும் இவர்களில் அப்துல் முத்தலிபையும், அப்துல் முத்தலிபின் மக்களில் என்னையும் தெரிவு செய்தான் என அருள்நபி நாயகம் கண்மணி ﷺ அவர்கள் நவின்ருர்கள்.

இதனை முஹிப்புத் திப்ரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், ‘‘தகாயிருல் உக்பா’’ என்ற தனது நூலில் இடம் பெற செய்துள்ளார்கள்.

6. ஹழ்ரத் இப்னு சஃத் அவர்கள் தபகாத் இப்னு சஃத் எனும் தனது நூலில் ஹழ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹுு அன்ஹுு அவர்கள் அறிவிப்புச் செய்த நபி மொழியினை குறிப்பிட்டுள்ளார்கள்.

قال رسول الله صلى الله عليه وسلم خير العرب مضر
وخير مضر عبد مناف وخير عبد مناف بنو هاشم وخير بنى هاشم
عبد المطلب والله ما افترق فرقتان منذ خلق الله آدم الا كنت
فى خيرهما

அரபியர்களில் சிறந்த குடும்பத்தினர் முழர். இவர்களில் சிறந்தவர் அப்துல் மனுஃப் குடும்பத்தினரும், இவர்களில் சிறந்தோர் பனூ ஹாஷிம். பனூ ஹாஷிம்களில் சிறந்தவர் அப்துல் முத்தலிப் தான் என கூறி

விட்டு, அல்லாஹ் ஹழ்ரத் நபி ஆதம் அலைஹிஸ்ஸலா மவர்களைப் படைத்ததிலிருந்து மக்கள் இரு பிரிவாயினர். அவர்களில் சிறந்தோரிலேயே என்னை ஆக்கினான் என அல்லாஹ் மீது ஆணையிட்டுக் கூறினார்கள் மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்.

7. இமாம் தப்ரானி ரஹ்மத்துல்லாஹி அவர்கள் இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி, ஹாஃபிழ் அபூ நயீம் ரஹிமஹுல்லாஹி போன்றோர் ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஹதீதினை கீழ்க்காண்கின்றவாறு பதிவு செய்துள்ளார்கள்.

قال رسول الله صلّى الله عليه وسلّم انّ الله الخلق الخلق
فاختار من بنى آدم العرب واختار من العرب مضر واختار من
مضر قريشا واختار من قريش بنى هاشم واختارني من بني هاشم
فانا خيار الى خيار

அல்லாஹு தஆலா படைப்பினங்களைப் படைத்து அவர்களில் ஆதமுடைய மக்களில் அரபுகளையும், இவர்களில் முழர் கூட்டத்தையும், முழரில் குறைஷி வம்சத்தையும், இவர்களில் நின்றும் பனூ ஹாஷிமை யும் இவர்களிலிருந்தே என்னையும் தெரிவு செய்தான். நானே சகலரையும் விட மிகச் சிறந்தவன் என்றார்கள் பூமான் நபி صلى الله عليه وسلم அவர்கள்.

8. ஹழ்ரத் அப்பாஸ் இப்னு அப்தில் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்க இமாம் திர்மிதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் பைஹகீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் பதிவு செய் துள்ள ஹதீது,...